# MANKULAM AN NEW ADMINISTRATIVE CENTRE IN NORTHERN PROVINCE

Eastern University, Sri Lanka
Academic Affairs Department
2 6 APR 2018
Vantharumoolai
Chenkalady

**BY**

**MISS.JESITHA RAMACHCHANDRAN**

**REGISTRATION NUMBER:EU/IS/2011/AC/333**

**INDEX NUMBER:CS 4634**

**The Dissertation Submitted For The partial Fulfillment Of The Requirements For The Degree Of Bachelor Of Arts(Special) In Geography In The Faculty Of Arts & Culture> Eastern University, Srilanka.**

LIBRARY
17 MAY 2018
EASTERN UNIVERSITY, SRI LANKA

**DEPARTMENT OF GEOGRAPHY,**

**FACULTY OF ARTS AND CULTURE,**

**EASTERN UNIVERSITY,**

**SRILANKA,**

**2018.**

FAC582
Project Report
Library - EUSL

PROCESSED
Main Library, EUSL

## ஆய்வுச் சுருக்கம்

பூகோள ரீதியாக மிக விரைவாக அதிகரித்துச் செல்லும் நகர உருவாக்கங்களினால் ஏற்படுத்தப்பட்ட தாக்கங்களில் சமனற்ற இடஞ்சார் அபிவிருத்தி என்பது முக்கியமானதொன்றாகக் காணப்படுகின்றது. உலக நாடெங்கிலும் மத்திய நகரங்கள் பல்வேறு விதமான கோணங்களில் உருப்பெற்று வருகின்றன. புதிதாக உருப்பெற்று வரும் நகரங்கள் அந்த நாட்டில் அல்லது பிராந்தியத்தில் பல்வேறு விதமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

மாங்குளம் வடமாகாணத்தின் நிர்வாக மையம் என்கின்ற இவ் ஆய்வானது வடமாகாண மக்களின் நிர்வாகத் தேவைகளை இலகுவாகப் பூர்த்தி செய்வதற்கான நகரத்தினைத் தெரிவு செய்தல், வடமாகாணத்தின் நிர்வாக மையம் மாங்களத்தில் அமைவதற்கான வாய்ப்புக்களை இனங்காணுதல், மாங்குளத்தில் நிர்வாக மையம் அமைவதனால் வடமாகாணத்தின் சமூக, பொருளாதார, இடஞ்சார் அபிவிருத்தியில் ஏற்படக் கூடிய மாற்றங்களை ஆராய்தல் போன்றவற்றைப் பிரதான நோக்கங்களாகக் கொண்டமைந்துள்ளது.

மேலும் வடமாகாணத்தில் நிரந்தரமாக நிர்வாக மையம் இல்லாததால் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்த்து சமனான இடஞ்சார் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு பொருத்தமான இடத்தில் நிர்வாக மையம் அமைய வேண்டியதன் அவசியத்தன்மையை வலியுறுத்துவதே இவ் ஆய்வின் முக்கியத்துவமாகும்.

இவ் ஆய்விற்காக வடமாகாணம் தொடர்பான அடிப்படைத் தரவுகள், அதிலும் குறிப்பாக மாங்குளப் பிரதேசத்தின் அடிப்படைத் தரவுகள் மற்றும் நிர்வாக மையம் தொடர்பான தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. முற்றுமுழுதாக இரண்டாம் நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இவ் ஆய்வானது ஒரு விபரண ரீதியான ஆய்வாக அமைகின்றது. அதாவது வடமாகாணத்தில் புதிய நிர்வாக மையம் மாங்குளத்தில் அமைவதற்கு அந்த இடம் பொருத்தப்பாடுடையதா? என்பதனை அறியவும் மாங்குளத்தில் நிர்வாக மையம் அமைவதனால் ஏற்படும் எதிர்கால அபிவிருத்தியையும் விபரிப்பதாக அமைகின்றது. அத்துடன் மாங்குளம் நகரம் நிர்வாக மையத்திற்கான இடப் பொருத்தப்பாடு, சாத்தியத் தன்மைகளை மதிப்பிடுவதற்கு ஞறுமுவு பகுப்பாய்வு, மத்திய இடக்கோட்பாடு மற்றும் வளர்ச்சி முனைக் கோட்பாட்டு அணுகுமுறை போன்ற நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இவ் ஆய்வின் மூலம் கிடைக்கப் பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில் மாங்குளம் நகரம் புதிய நிர்வாக மையம் அமைவதற்கான வளங்களைத் தன்னகத்தே கொண்டமைந்துள்ளது. ஏனைய மாவட்டங்களோடு ஒப்பிடுகையில் மாங்குளமே நிர்வாக மையம் அமைவதற்குச் சாலப்பொருத்தமானதாகும். ஏனைய மாவட்டங்கள் எல்லா வாய்ப்புக்களையும் ஒருங்கே கொண்டமையவில்லை. முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்கள் கரையோர மாவட்ட நகர்களாகக் காணப்படுகின்றது. தற்போதைய

நிர்வாக மைய நகரமான யாழ்ப்பாணத்தில் எதிர்கால அபிவிருத்திக்கான நிலப்பற்றாக்குறை, நீர்ப்பற்றாக்குறை என்பன சவாலுக்குரியதாக காணப்படும் அதே வேளை ஏனைய மாவட்ட நகர்களுக்கு மிகத் தொலைவிலேயே யாழ்ப்பாண நகரம் அமைவு பெற்றுள்ளது. அத்துடன் கிளிநொச்சி மாவட்டம் வடமாகாணத்தின் மையப் பிரதேசமாகக் காணப்பட்டாலும் அதன் நிலம் பெரும்பாலானவை விவசாயத்திற்குரியதாகவே காணப்படுகின்றது. ஆகவே கிளிநொச்சி நிர்வாக மையமாக இடஅமைவு பெற்றால் விவசாயத்தில் பாதிப்பு ஏற்பட்டுப் பொருளாதாரத்தில் வீழ்ச்சி ஏற்பட வழிசமைக்கும்.

ஓட்டுமொத்தமாக நோக்கும் போது வடமாகாணத்தின் நிர்வாக மையம் பொருத்தமான இடஅமைவு இல்லாததால் பல்வேறு பிரச்சினைகள் தோற்றம் பெற்றுள்ளதுடன் அதற்குத் தீர்வாக வடமாகாணத்தில் மையப்பகுதியில் நிர்வாக மையம் இடஅமைவு பெற வேண்டும். அந்த வகையில் மாங்குளம் நகரமே அதற்குப் பொருத்தமானதாகும். அரசினால் முன்வைக்கப்பட்ட திட்டப்பிரேரணையும் மாங்குளம் நகரமேயாகும். எனவே விரைவில் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே இவ் ஆய்வினூடாக உணர்த்தப்படுகின்றது.

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| நன்றியுரை | i |
| ஆய்வுச் சுருக்கம் | ii |
| பொருளடக்கம் | iii |
| அட்டவணைகளின் விபரம் | v |
| வரைபடங்களின் விபரம் | vi |


**அத்தியாயம்-1**


| | |
|---|---|
| 1.0 ஆய்வு அறிமுகம் | 1 |
| 1.1 ஆய்வுப் பின்னணி | 2 |
| 1.2 ஆய்வுப் பிரச்சினை | 3 |
| 1.3 ஆய்வு தொடர்பான வெளியீடுகளின் மீள்பார்வை | 5 |
| 1.4 ஆய்வுப் பிரதேசம் | 7 |
| 1.5 ஆய்வு வினா | 9 |
| 1.6 ஆய்வின் நோக்கம் | 10 |
| 1.7 தரவும் ஆய்வு முறையும் | 10 |
| 1.8 அத்தியாய ஒழுங்கமைப்பு | 11 |


**அத்தியாயம்-02**


| | |
|---|---|
| 2.0 மாங்குளப் பிரதேசத்தின் பௌதிக,சமூக பொருளாதாரப் பின்ன்ணி | |
| 2.1 பௌதிகப் பின்னணி | |
| 2.1.1 தரைத்தோற்றம் | 13 |
| 2.1.2 மண் | 13 |
| 2.1.3 காலநிலை | 13 |
| 2.1.4 நீர்வளம் | 15 |
| 2.1.4.1 மேற்பரப்பு நீர்வளம் | 15 |
| 2.1.4.2 தரைக்கீழ் நீர்வளம் | 15 |
| 2.1.5 நிலப்பயன்பாடு | 16 |
| 2.2 சமகப் பின்னணி | 16 |

2.2.1 குடித்தொகைப் பரம்பல்,அடர்த்தி 16
2.2.2 குடித்தொகைக் கட்டமைப்பு 17
2.2.3 சேவைத் தொழில் 19
2.2.3.1 கல்வி 19
2.2.3.2 மருத்துவ சுகாதார வசதி 19
2.2.3.3 போக்குவரத்து 19
2.2.3.4 தொலைத்தொடர்பு வசதிகள் 19
2.2.3.5 சமக நிறுவனங்கள் 19
2.2.4 பொருளாதாரம் 20
2.2.4.1 விவசாயம் 20
2.2.4.2 உபஉணவுப்பயிர் 22
2.2.4.3 கைத்தொழில் 22

அத்தியாயம்-03

3.0 வடமாகாணத்தின் புதிய நிர்வாக நகரத்தினை தெரிவுசெய்தல்
3.1 வடமாகாணத்தின் புதிய நிர்வாக மையம் அமைவதற்கு செல்வாக்கச் செலுத்தும் காரணிகள் 23
3.2 வடமாகாணத்தின் நிர்வாக மையத்தால் தற்காலத்தில் ஏற்படுகின்ற பிரச்சினை24
3.3 வடமாகாணத்தின் புதிய நிர்வாக மையம் அமைவதற்கான தேவைகள் 25
3.3.1 பன்முகப்படுத்தப்பட குடிப்பரம்பலுடன் கூடிய நிர்வாக மையம் 25
3.3.2 இடஞ்சார் அபிவிருத்தியை பரவலடைய செய்தல் 25
3.3.3 நிலப்பயன்பாடுகளில் மாற்றம் 25
3.3.4 பிரதேச வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையை மேம்படுத்தல் 26
3.4 நிர்வாக மையம் தெரிவு செய்யப்படும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் 26
3.5 நிர்வாக மையத்திற்கான பொருத்தமான இடம்நிர்ணயித்தல் 29

**அத்தியாயம்-04**

**4.0 மாங்குளம் நிர்வாக மையத்தின் இடப்பொருத்தப்பாடும் எதிர்காலத் திட்டமிடலும்**

4.1 வடமாகாணத்தின் நிர்வாக மையம் மாங்குளத்தில் அமைவதற்கான வாய்ப்புக்கள் 39

4.2 வடமாகாணத்தின் பொதுவான இடஞ்சார் அபிவிருத்திப் போக்குகள் 50

4.3 மாங்குளம் நிர்வாக மையமும் எதிர்கால அபிவிருத்தித் திட்டமிடலும் 51

4.3.1 வளர்ச்சிமுனைக் கோட்பாடு 51

4.3.2 வளர்ச்சி மைய எண்ணக்குர 53

4.4 கோட்பாட்டு அடிப்படையில் வடமாகாணத்தின் இடஞ்சார் அபிவிருத்தித் திட்டமிடல் 55

4.5 மாங்குளத்தின் புதிய நிர்வாக மையத்திற்கான திட்டப் பிரேரணையும் அமுலாக்கமும் 60

4.6 புதிய நிர்வாக மையத்துடன் தொடர்புடைய பிரச்சினைகள் 64

**அத்தியாயம் 05**

5.0 முடிவுரைகளும் சிபார்சுகளும்

5.1 முடிவுரைகள் 65

5.2 சிபார்சுகளும் 69

**உசாத்துணை நூல்கள்**

**அட்டவணைகளின் விபரம்**

2.1 மாங்குளப் பிரதேசத்தின் சராசரி மழைவீழ்ச்சி 14

2.2 மாங்குளப் பிரதேசத்தின் கிராம அடிப்படையிலான குடித்தொகை 17

2.3 ஆண்,பெண் வயதடிப்படையிலான குடித்தொகை 18

2.4 மாங்குளப் பிரதேசத்தின் வீதி வலையமைப்பு 20

3.1 யாழ்ப்பாண மாவட்டத்தின் சனத்தொகைப் பரம்பல் 31

3.2 முல்லைத்தீவு மாவட்டத்தின் சனத்தொகைப் பரம்பல் 33

3.3 வவுனியா மாவட்டத்தின் சனத்தொகைப் பரம்பல் 34

3.4 கிளிநொச்சி மாவட்டத்தின் சனத்தொகைப் பரம்பல் 37